[27th January 1970

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை

திரு. ஜி. வசந்த பாய்: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன்.—இந்த மருத்துவ மனையில் நோயாளிகளுக்குக் குறைவில்லை.

Allotment of seats in Medical College.

a* 35. *Q.*—THIRU M. AIYASWAMY: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:—

(*a*) whether a particular number of seats have been allotted to (1) foreign students and (2) students of other States in the selection of students to Medical College; and

(*b*) if so, the details thereof?

மருத்துவக் கல்லூரியில் இடங்களை ஒதுக்கல்

திரு. எம். அய்யாசாமி: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வில் (1) அயல்நாட்டு மாணவர்கள் (2) பிற மாநில மாணவர்கள் ஆகியவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ)—

	இடங்கள்.
அயல் நாட்டு மாணவர்கள்	4
கொழும்பு திட்ட மாணவர்கள்	2
ஈழ நாட்டு இந்தியருக்காக	1
மரீசியஸ் தமிழ்வழி மாணவர்	1
ஜம்மு காஷ்மீர்	2
பர்மிய அகதிகள்	2
நேபாள மாணவர்கள்	2
தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் மாணவர்கள்	5
பிஜித்தீவுகள் தமிழ்வழி மாணவர்	1
யூனியன் பிரதேச மாணவர்	1
ஆக மொத்தம்	21

* Postponed from the list of questions for 23rd January 1970.

27th January 1970]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : அங்கத்தினர் திரு. அய்யாசாமி அவர்கள் இந்த வினவை அனுப்பிய தேதியைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: 15—12—1969

திரு. எம். எத்திராஜுலு : தலைவர் அவர்களே, கடல் கடந்து சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் தமிழகத்திலிருந்து பெருவாரியான தமிழர்கள் தொழில் நிமித்தமாகவும் வியாபார நிமித்தமாகவும் சென்று குடியேறியிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் மருத்துவத் துறையில் படித்து பட்டம் பெற இடம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். அப்படிப் பட்ட தமிழர்களின் குழந்தைகள் மருத்துவத் துறையில் படிப்பதற்கு மத்திய சர்க்காருக்கு எழுதி அதிக இடங்களை வாங்கிக் கொடுக்க தமிழக அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே இடம் கொடுப்பது நாமே தவிர அவர்கள் அல்ல. 15 இடம் ஒதுக்கினால், 15 ஆட்களைத் தேர்ந்தெடுக்க இந்திய அரசு தயாராக இருக்கிறது. நாம் தான் இடங்களை ஒதுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மலேசியா, சிங்கப்பூர் மாணவர்களுக்கு 5 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேல் ஒதுக்கப்பட்டால், நம்முடைய மாணவர்களுக்கான இடம் குறையும் என்பதால், அந்த அளவுக்கு கொடுக்கப்படுகிறது.

திரு. வி. கே. ராமசாமி முதலியார் : மலேயா, சிங்கப்பூர் தவிர மற்ற காமன்வெல்த் நாடுகளுக்கு நாம் ஏதாவது இடம் ஒதுக்குகிறோமா ?

மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் : முதலில் குறிப்பிட்ட அந்த நாடுகளுக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி: அயல் நாட்டு அரசு நம்முடைய கலாசாலைகளுக்கு மானியம் வழங்குகிறதா? நேரடியாக மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறதா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: சில நாடுகளுக்கு அவர்களே தருகிறார்கள். நாம் தமிழகத்தில் 10 ஆண்டுகாலம் தொடர்ந்து இருந்தவர்களுக்கு, இதைத் தாயகமாகக் கொண்டவர்களுக்கு, ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். மற்றவர்கள் தாங்களே பணம் கொடுத்து படிக்கிறார்கள்.

திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி : எந்தெந்த ஊரிலிருந்து ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். நெடுஞ்செழியன் : அதற்கான விவரம் இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : இந்த இடங்கள் ஒதுக்குவதில் மத்திய அரசுக்கு ஏதேனும் பங்கு உண்டா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : பொதுவாக அயல்நாட்டு மாணவர்களுக்கு நான்கு இடங்கள் ஒதுக்குகிறார்கள். அமெரிக்கா, ரஷியா போன்ற நாடுகளாக இருந்தாலும், அதில் மத்திய அரசிற்கு எந்தப் பங்கும் இல்லை.

திரு. எம். அய்யாசாமி : மலேசியா போன்ற நாடுகளில் இருக்கிற இந்திய வம்சாவளியினருக்கு, இங்கே படிக்கிற மாணவர்களுக்கு இந்திய அரசு மானியம் ஒதுக்குகிறதா? அது சம்பந்தப்பட்ட மானியங்களில் தமிழக அரசுக்குத் தொடர்பு உண்டா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: அது பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும். நான் முதலில் சொன்ன பதிலையொட்டிச் சொல்கிறேன். இந்தக் கேள்வி முதலில் போடப்பட்டு, அது காலம் கடந்ததால் மறுபடியும் திரும்ப 15—12—1969-ல் போடப்பட்டிருக்கிறது.

திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : 1969-ல் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்ததன் சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்டேன். நண்பர் திரு. அய்யாசாமி அவர்கள் இந்தக் கேள்வியைத் கொடுப்பதற்கு முன்பு அனுப்பினேன். இன்னும் பதில் வரவில்லை, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Questions 56 and 57 are postponed.

University Grants Commission Scales of Pay.

*** 58. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :**

(*a*) whether all the private Colleges in the State have implemented the University Grants Commission Scales of Salary to their staff ; and

(*b*) if not, the reasons therefor ?

பல்கலைக் கழக ஆணைக்குழு சம்பள வீதங்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்——

(அ) இம்மாநிலத்தில் உள்ள தனியார் கல்லூரிகள் அனைத்தும் பல்கலைக் கழக ஆணைக்குழு சம்பள வீதங்களைத் தத்தம் ஆசிரியப் பணியாளர்களுக்கு அளிக்கின்றனவா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. the Minister for Education be pleased to state whether even in the Government Colleges 25 per cent of the language staff have been upgraded as per the recommendations of the University Grants Commission ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. 25 சத வீதம் ஒதுக்கச் சொன்னார்களா, அது நிறைவேற்றப்பட்டதா என்பது சம்பந்தமாகக் குறிப்பில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லலாம்.

Water-Supply to the Government Erskine Hospital, Madurai

*** 59. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the steps so far taken and proposed to be taken to ensure unfailing water-supply to the Government Erskine Hospital, Madurai ?**

அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்——

மதுரையில் உள்ள அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு தட்டின்றி நீர் கிடைக்கச் செய்வதற்காக இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளும் இனிமேல் எடுக்கக் கருதும் நடவடிக்கைகளும் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையின் எல்லைக்குள் நிறைய துளைக் கிணறுகளை அரசு அமைத்துள்ளது. மதுரை ரோட்டரி சங்கம் இரண்டு ஆழமான துளைக் கிணறுகளை மருத்துவமனை சுற்றுப் பகுதிக்குள் நிறுவியுள்ளது. T. V. S. நிறுவனம் ஒரு துளைக் கிணற்றைச் செப்பனிட்டது. இத் துளைக் கிணறுகள் எல்லாம் வேண்டிய அளவு நீரை அளிக்கின்றன. மருத்துவ மனையில் தண்ணீர் பற்றாக்குறை கணிசமான அளவில் தீர்ந்துவிட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.